**STC .No. 79/2025**
**நாள் – 27.01.2026**

பு.**சா.1 – திரு.ராஜாசிதம்பரம் சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை )**

(**எதிரியின் ஆஜர் விலக்களிக்கப்பட்டுள்ளது**).

நான் B.SC கணக்கு படித்துள்ளேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் எனது புகாரில் முதல் எதிரிதான் 2–ம் எதிரி நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை வழக்கு தாக்கல் செய்யும் வரை பார்த்துக் கொண்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் அன்று 31.03.2022 எதிரியிடமிருந்து கடனுறுதி சீட்டு வேறு காசோலை எதுவும் பெறவில்லை என்றாலும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். 10.05.2022 ம் RTGS மூலமாக ரூ.5 இலட்சம் எதிரிக்கு செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளதற்கு ஆதரவாக வங்கி பரிவர்த்தனை குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் இருந்து பெற்ற ரூ.50 இலட்சத்திற்கு, 08.08.2024 அன்று தேதியிட்ட பேங்க் ஆப் பரோடா வங்கி காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு 2023 முதல் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார் நான் சொன்ன வாறு 08.08.2024 அன்று காசோலை வழக்கியுள்ளேன் என்றாலும், அவர் 2023 ம் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் அதன் பிறகு உடல்நிலை சரியாகிவிட்டது. அவர் உடல்நிலை சரியில்லாமல் தான் இருக்கிறார் என்றாலும் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகக்கூடிய நிலையில் இல்லை என்றாலும் நான் தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் சரியல்ல. 2023 லிருந்து 2 ம் எதிரி நிறுவனத்தின் நிறுவாகத்தை வேறு நபர்கள் கவனித்து வருகிறார்கள் என்றாலும், 1 ம் எதிரி காசோலை கொடுத்ததாக தவறாக குறிப்பிடுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் வருமானம் குறித்து ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனக்கு ரூ.50 இலட்சம் கொடுக்கும் அளவிற்கு வருமானம் மூலம் இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்றாலும் நான் பொய்யாக உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் தொகை ஏதும் பெறவில்லை என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.01.27 12:12:29 +0530

Judicial Magistrate No.I
Dindigul.